Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. STC.101/2026

Witness for Prosecution : PW1

Name ஞானசக்தி Taluk :

Father's / Husband Name கணேசன் Calling :

Village Age : 35

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 17.03.2026

எதிரிகள் 1,2 ஆஜர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

பூஞ்சோலை என்னுடைய மனைவி என்றால் சரிதான். ஜெயலட்சுமி என்பவர் மாமியார். கேசவன், அன்பரசன் என்பவர்கள் மச்சான் ஆவார்கள். செல்வி, சசிகலா என்பவர்கள் என் மாமியாரின் உடன் பிறந்தவர்கள். பரமசிவம் என் மனைவியின் உறவினர், மற்றவர்கள் யார் என்று தெரியாது. எனக்கு திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் ஞாபகம் இல்லை, சுமார் எவ்வளவு வருடம் ஆகும் என்றால் சுமார் 10 வருடம் இருக்கும். பூஞ்சோலைக்கும் எனக்கும் குழந்தைகள் உள்ளார்களா என்றால் ஒரு பையன், ஒரு பெண் குழந்தை உள்ளார்கள். திருமணம் நடந்து 5 வருடம் ஒன்றாக இருந்தோம். எதனால் எனக்கும் என் மனைவிக்கும் சண்டை ஏற்பட்டது என்றால் பணம் கொடுத்து வாங்குவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. பிரச்சனை ஏற்பட்டு 2018 முதல் அவரது அம்மா வீட்டில் குடியிருந்து வருகிறார். நான் வேறுஒரு பெண்ணை திருமணம் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதாக என் மனைவி புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

அதன் பேரில் என் மீதும், என் தந்தை மீதும் குற்ற எண்.282/2018 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு என் மனைவி ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். திவ்யா என்ற பெண்னை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன் என்றால் இல்லை. திவ்யாக்கும் எனக்கும் தன்ஷிகா, மற்றும் கனிஷ் என்ற இரண்டு குழந்தைகள் உள்ளது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும்

பிறப்பு சான்றிதழ் தன்ஷிகா என்வரது என்றால்இல்லை. பிறப்பு சான்றிதழில் த/பெ. ஞானசக்தி என்றும், தாயார் பெயர் திவ்யா என்றும், ஊர் பெயர் தாதம்பட்டி என்றும், வெள்ளைக்கவுண்டர் நகர் என்றும் உள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது.

என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் படித்து காட்டினார்கள் நான் கையொப்பம் செய்தேன். நான் என் மனைவி பூஞ்சோலை என்பவரை அடித்து துரத்திவிட்டு திவ்யா என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதில் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் சரியல்ல. அன்றைய தினம் பூஞ்சோலை அங்கு இல்லை என்றால் சரியல்ல.

நான் காவல் நிலையத்தில் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 30.07.2018 ஆம் தேதி இரவு 06.30 மணிக்கு புகார் கொடுத்தேன். புகார் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் எழுத்து பூர்வமாக புகார் எழுதி கொடுத்தேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் தற்போது இரண்டாவது மனைவி திவ்யாவுடன் வாழ்ந்து வருகிறேன், என் மீது உள்ள வழக்கில் இருந்துதப்பிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2018 ல் சம்பவம் நடைபெற்றதாக சொல்லிவிட்டு 2021 ல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாமதத்திற்கான காரணம் என்ன என்றால் (சாட்சி நேரடியாக பதில் அளிக்காமல் தவிர்க்கும் வகையில் வேறு சம்மந்தம் இல்லாத பதில் அளிக்கிறார்.) புகார் பொய் புகார் என்பதால் தள்ளுபடி செய்கிறேன் என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/-D.Saravanan,B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)